**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருக்கழுக்குன்றம்,**

முன்னிலை :- **திரு. ஏ.பஷீர், எம்.ஏ.,எம்.எல்.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
திருக்கழுக்குன்றம்.

2015 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ம் நாள் செவ்வாய்கிழமை
மன்மத வருடம் ஐப்பசி மாதம் 10ம் நாள்
பி.ஆர்.சி. நெம்பர் 1/2015

அரசு தரப்பில் :-
காவல் ஆய்வாளர் அவர்கள்,
கல்பாக்கம் காவல் நிலையம்,
கு.எண். 241/201 ..குற்றமுறையிடுபவர்.

எதிர்

விஜய் பிரதாப் சிங், வயத 43/2014,
த/பெ. அமீர்த்பால் சிங்.

.. எதிரி.

இவ்வழக்கு 21.01.2015 அன்று இந்நீதிமன்றக்கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சங்கரப்பன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

குற்ற முறையிடுபவர், எதிரி மீது தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையில், வழக்கின் எதிரி கல்பாக்கம் மத்திய தொழில் பாதுகாப்பு படையில் தலைமை காவலராக (904653122 of CISF) பணிபுரிந்த போது, நெ. 16, 18வது அவின்யு, கல்பாக்கம் என்ற விலாசத்தில் குடியிருந்தார் என்றும், வழக்கில் இறந்துவிட்ட மோகன் சிங், சுப்புராஜ், கணேசன் ஆகியோருடன் அவருடன் பணிபுரிந்து வந்தார்கள் என்றும், மற்றும் வழக்கில் காயம்பட்ட கோவர்தன பிரசாத் மற்றும் பிரதாப் சிங் ஆகியோரும் மத்திய தொழில் பாதுகாப்பு படையில் சம்பவ நேரத்தில் உதவி ஆய்வாளாராக பணிபுரிந்தார்கள் என்றும், வழக்கில் இறந்துவிட்ட மூன்று நபர்கள் மற்றும் காயம்பட்ட இருவரும் எதிரி விஜயபிரதாப் சிங்கை அவர்கள் அதற்கு முன் பணிபுரிந்த இடத்திலும் மற்றும் கல்பாக்கம் அனு மின்நிலையத்தில் பணிபுரிந்த போதும் தொடர்ந்து அவரை கிண்டல் செய்தும் கேலி செய்தும் அவருடைய மரியாதையை குலைக்கும் வகையிலும் நடந்து வந்தார்கள் என்றும், அவர்களின் அருவருக்கதக்க செயல்களால் எதிரி அவர்கள் மீது கோபமுற்று கடந்த 8.10.2014 அன்று எதிரி ஆயுத கிடங்கிற்கு சென்று அங்கிருந்த ரிஜிஸ்டரில் கையெழுத்திட்ட பிறகு அங்கிருந்த கார்பன் மிஷின் கன் 2 மெகசைன்ஸ் மற்றும் 60 புல்லட்டுக்களை திரு. சர்பதி என்பவரிடம் வாங்கிக்கொண்டார் என்றும், அதே வேகத்தில் அவர் மத்திய தொழில் பாதுகாப்பு படை கேம்ப் பேரக் முதல் தளத்திற்கு சென்று அங்கு தூங்கிக்கொண்டிருந்த மோகன் சிங் என்பவரை விடியற்காலை 4.50 மணிக்கு எழுப்பி அவரிடம் வலிய சண்டை இழுத்து தன்னிடம் இருந்த துப்பாக்கியால் அவரை 4 ரவுண்டு சுட்டார் என்றும், மேலும், அங்கிருந்து போர்ட்டிக்கோவில் இருந்த சுப்புராஜ் மற்றும் துணை ஆய்வாளர் கணேசன் அவர்களையும் சுப்பாக்கியால் சுட்டார் என்றும், அதன் தொடர்ச்சியாக அங்கிருந்த கோவர்தனபிரசாத் மற்றும் பிரதாப் சிங் ஆகியோர்களையும் கொல்லவேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்களையும் துப்பாக்கியால் சுட்டபோது கோவர்தனபிரசாத்திற்கு சொற்பகாயமும், பிரதாப்சிங் என்பவருக்கு கொடுங்காயமும்

ஏற்பட்டது என்றும், மேற்படி எதிரியின் செய்கையால் அவர்கள் இறந்திருந்தால் எதிரி கொலை குற்றவாளியாகிறார் என்றும், எனவே, எதிரி இ.த.ச. பிரிவுகள் 302 (3 எண்ணிக்கைகள்), 326 மற்றும் 307ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. எதிரி ஆஜர்படுத்தப்பட்டவுடன் அவருக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

3. எதிரி மீதான குற்றம் கனம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தாரால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றம் என்பதால் வழக்கினை விசாரணை பொருட்டு கனம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச. பிரிவு 209(அ)ன் கீழ் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

4. எதிரி கடந்த 09.10.2014 முதல் நீதிமன்றக் காவலில் இருந்து வருகிறார். எதிரி தொடர்ந்து நீதிமன்றக் காவலில் இருந்து வரவும், மாண்பமை செங்கல்பட்டு அமர்வு நீதிமன்ற வாய்தா தேதி அறியும் பொருட்டு, எதிரியை மாண்பமை செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்தில் வரும் 06.11.2015 அன்று தவறாமல் ஆஜர்படுத்தவேண்டும் என்று சிறைகண்காணிப்பாளருக்கு கு.வி.மு.ச.பிரிவு 209(ஆ)ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

5. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தடயங்களையும், ஆவணங்களையும் செங்கற்பட்டு அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க கு.வி.மு.ச. பிரிவு 209(இ)ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

6. இவ்வழக்கினை செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பியது குறித்து அரசு குற்றத்துரை வாதுரைஞருக்கு அறிவித்தல் செய்ய கு.வி.மு.ச. பிரிவு 209(ஈ) ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

7. இவ்வழக்கின் எதிரி செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட போதிய வசதி இல்லை என்று கூறினார். எதிரிக்கு என்னால் இந்தியில் சொல்லப்பட்டு, அவர் பதில் தமிழில் பதிவு செய்யப்பட்டது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு தட்டச்சரால் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2015ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ம் நாளாகிய இன்று என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
திருக்கழுக்குன்றம்.

பின் இணைப்பு .- இல்லை.

மா.உ.ம.நீ.ந./தி.க.கு.